**TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,**
(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)
Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்
# தலைமை செயல் அலுவலர்,
# முன்னிலை: திருமதி. S. திவ்வியதர்ஷினி , இ. ஆ. ப.,
# அவர்களின் செயல்முறை ஆணை

**செயல்முறை ஆணை எண். 118/ 2024/ த . மா .ஊ.வா. இ நாள்: 29-06-2024**

| | | |
|---|---|---|
| பொருள் | | த.மா.ஊ.வா. இ- தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் - கரும்பு பரு நாற்றுக்களை உற்பத்தி செய்தல் திட்டம் செயல்படுத்துதல் - தொடர்பாக |
| பார்வை | 1. | தே. ஊ. வா. இ. - ஆண்டு செயல் திட்டம் 2024-25 - அனுமதி வழங்கப்பட்ட செயல் திட்டங்கள் |
| | 2. | மாண்புமிகு இளைஞர்கள் நலம் மற்றும் விலயாட்டு மேம்பாடு துறை அமைச்சரால் 27.06.2024 அன்று தமிழநாடு சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு. |

*****

**ஆணை**

மாண்புமிகு இளைஞர்கள் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரால் 27.06.2024 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்: 11 - கரும்பு பரு நாற்றுக்கள் உற்பத்தி செய்தல் தொடர்பாக.

**11. சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளால் உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பரு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, அலகுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 50 அலகுகளுக்கு ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும்.**

**கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் வேலூர் மாவட்டங்களில் கரும்பு பயிரில் அதிக மகசூலை உறுதி செய்வதற்காக, தேர்வு செய்யப்பட்ட சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளால் 50 அலகுகள் அமைக்கப்பட்டு உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பரு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, ஒரு அலகுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 50 அலகுகளுக்கு ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும்.**

**முன்னுரை**

தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடி சுமார் 1.60 இலட்சம் ஹெக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கரும்புப் பயிர் சர்க்கரை, வெல்லம், எரிசாராயம், எத்தனால், காகித உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாகயிருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவுத்துறை இரண்டு பொதுத்துறை மற்றும்

22 தனியார் துறை என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன கரும்பு சாகுபடியில் செலவினங்களைக் குறைத்தஅதிக மகசூல் தரும் தொழில்நுட்பங்களைகடைப்பிடிப்பதன் வாயிலாக கரும்பு விவசாயிகளின் வருமானம் உயரும் வாய்ப்புள்ளது.

கரும்பு சாகுபடியில் விதைக்கரும்பு ஒரு முக்கிய காரணியாக இருந்து வருகிறது . வழக்கமாக கரும்பு விவசாயிகள் கரும்பு நடவுக்கு சுமார் நான்கு டன்கள் விதைக்கரும்பிலிருந்து 30,000 இருபரு கரணைகளை பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 12,000 ரூபாய் செலவினம் ஏற்படுகிறது. விதைக்கரும்பிற்கான செலவினத்தை குறைத்து கரும்பு உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் கரும்பு விவசாயிகளுக்கு பூச்சி, நோய் தாக்குதல் இல்லாத தரமான பருசீவல் நாற்றுக்கள் உற்பத்தி செய்து வழங்கும் தொழில்நுட்பத்தை ICAR கரும்பு இனப்பெருக்க நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகியவை அறிமுகம் செய்து செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் கரும்பு சாகுபடி செலவு கணிசமாக குறைவதுடன் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும்.

## விதைப்பரு சீவல் நாற்றுக்களை பயன்படுத்துவதின் சிறப்புகள்

- சாதாரண சாகுபடி முறையில் கரும்பு விவசாயிகள் ஏக்கருக்கு சுமார் 4 டன்கள் விதைக் கரும்பு பயன்படுத்தி வரும் நிலையில் ஒரு டன் கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப்படும் 5000 முதல் 6000 பருசீவல் நாற்றுக்கள் போதுமானது. இதன் மூலம் விதைக்கரும்புக்கான செலவு கணிசமாக குறைகிறது.
- நேரடி விதைக்கரும்பு நடவில் சுமார் 60 முதல் 70 சதவீதம் வரை முளைப்புத்திறன் உள்ள நிலையில் பருசீவல் நாற்றுக்கள் நடவில் சுமார் 90 சதவீதம் வரையில் முளைப்புத்திறன் உறுதி செய்யப்படுகிறது.
- கரும்புத்தூர்களில் கூடுதல் கிளைப்புகள் மூலம் அதிகம் மகசூல் (12 முதல் 15 கிளைப்புகள்).
- பருசீவல் நாற்றுக்கள் 30 நாட்கள் வரை நிழல் வலைக் கூடங்களில் பராமரிக்கப்படுவதால் மழை காலங்கள் நின்றவுடன் கரும்பு நடவு மேற்கொள்வது எளிது.
- கரும்பின் அறுவடை வயதில் ஒரு மாதம் குறைவு.
- பயிருக்கு நல்ல காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் கிடைப்பதன் காரணமாக தனிக்கரும்பின் எடை அதிகரிக்கிறது.
- விதைப்பரு சீவல் நாற்று முறையில்பாசன நீரின் ,தேவை குறைவு.
- அகலப்பார் முறையில் நடவு செய்வதால் ஊடுபயிர் சாகுபடி மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

## கரும்பு நாற்று உற்பத்திக்கான பயனாளிகள் தேர்வு

- கரும்பு சாகுபடியில் அனுபவம் கொண்ட 20 சுய உதவிக்குழு மகளிர் விவசாயிகளை தேர்வு செய்து ஒரு குழுவாக அமைக்க வேண்டும்.

- தேர்வு செய்யப்பட்ட உறுப்பினார்களில் யாரேனும் ஒருவருக்கு குறைந்தபட்சம் 50 சென்ட் நிலம் இருக்க வேண்டும்.
- இந்த கரும்பு நாற்று உற்பத்திக்குழுவில் குழு தலைவர் ,பொருளாளர், செயலாளரைத் தேர்வு செய்து, இதற்கென தனி வங்கிக் கணக்கு தொடங்கப்பட வேண்டும் .
- இந்த வங்கி கணக்கை பொருளாளர் மற்றும் செயலாளர் பராமரிக்க வேண்டும்.

## இடம் தேர்வு

- நடப்பு 2024–25 ஆம் ஆண்டில், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் பரிட்சார்த்த முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- கரும்பு நாற்று உற்பத்தி செய்யும் இடம் அதிகமாக கரும்பு சாகுபடி மேற்கொள்ளும் வட்டாரத்தில் இருக்க வேண்டும்.

## நாற்று தயார் செய்ய கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள்

- பருசீவல் நாற்றுக்கள் உற்பத்தி செய்ய ஆறு முதல் ஏழு மாத வயதுடைய விதைக்கரும்புகளை மட்டும் தேர்வு செய்ய வேண்டும்.
- தேர்வு செய்யப்பட்ட கரும்பிலிருந்து பருக்களை சேதமின்றி உரிய கருவிகள் மூலம் பிரித்தெடுக்க வேண்டும்.
- பிரித்தெடுக்கப்பட்ட பருக்களை ஒரு கிலோ யூரியா, 50 கிராம் கார்பென்டைசின், 200 மிலி மாலத்தியான் மருந்தினை 100 லிட்டர் நீரில் கலந்து 15 நிமிடம் ஊறவைத்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
- விதை நேர்த்தியை டிரைக்கோடெர்மா விரிடி 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து பின் பருக்களை 15 நிமிடம் ஊறவைத்து நாற்றுக்கள் உற்பத்தி செய்யலாம் .
- விதை நேர்த்தி செய்த விதை மொட்டுக்களை கோணிப்பையில் இறுகக் கட்டி, நிழலில் அடுக்கி வைக்க வேண்டும். இவற்றை காற்றுப்புகா வண்ணம், நன்கு மூடியிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- நன்கு மூடிய கோணிப்பைகளின் மீது பாரம் ஏற்றி, 5 நாட்கள் அப்படியே பாதுகாக்க வேண்டும். இடையில் தண்ணீர் தெளிக்க வேண்டியதில்லை.
- பின்னர், குழித்தட்டின் குழிகளில் பாதியளவில் தென்னை நார்க்கழிவினைக் (கோகோ பித் ) கொண்டு நிரப்ப வேண்டும். பின்பு, பருக்கள் மேல்நோக்கி இருக்குமாறு சற்று சாய்வாக அடுக்கி மீதி குழிகளை தென்னை நார்க்கழிவினைக் கொண்டு நிரப்ப வேண்டும்.
- குழித்தட்டுகளை வரிசையாகத் தண்ணீர் தெளிக்க வசதியாக வைத்து, தினமும் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

- சுமார் 300 சதுர அடி பரப்பில் நிழல் வலைக்குடில் அமைத்து அதில் கரும்பு குழித்தட்டு நாற்றுக்களை 30–45 நாட்கள் பராமரிக்க வேண்டும்.

## பயிற்சி

- பருசீவல் நாற்றுக்கள் உற்பத்தி தொடர்பாக இத்தொழில்நுட்பத்தில் ஏற்கெனவே ஈடுபட்டுவரும் கரும்பு விவசாயிகள் மூலம் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

**நிழல்வலைக்கூடம் – அளவு 300 சதுர மீட்டர்**

| வ.எண் | இனம் | செலவினம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | நிழல்வலைக்கூடம் அமைத்தல் (நிழல்வலை, இரும்பு குழாய்கள் மற்றும் இதர பொருட்கள் . | 1,00,000 |
| 2. | பிளாஸ்டிக் குழித்தட்டுக்கள் 1000 | 14,000 |
| 3. | தேங்காய் நார் – 3 டன்கள் | 16,000 |
| 4. | மோட்டாரால் இயங்கும் பரு எடுக்கும் இயந்திரம் | 55,000 |
| 5. | ஆள் கூலி மற்றும் இதர செலவுகள் | 15,000 |
| | **மொத்தம்** | 2,00,000 |

## நிதி ஆதாரம்

- ஒரு கரும்பு நாற்று உற்பத்தியாளர் குழுவிற்கு ரூ. 2 இலட்சம் சுழல்நிதியாக வழங்கப்படும்.
- கரும்பு விதைப்புப் பருவத்தில் குறைந்தது ஐந்து முதல் ஆறு முறை பருசீவல் நாற்றுக்கள் உற்பத்தி செய்யலாம். அதாவது, ஒரு ஆண்டில் சராசரியாக 2 முதல் 2.50 இலட்சம் பருசீவல் நாற்றுக்கள் உற்பத்தி செய்ய இயலும்.
- கரும்பு சாகுபடி இல்லாத காலங்களில் நிழல்வலைக்கூடங்களில் தோட்டக்கலை பயிர்களின் நாற்றுக்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம்.

## கடனை திருப்பி செலுத்துதல்:

- கரும்பு நாற்றுக்கள் உற்பத்திக்காக சுழல் நிதியாக வழங்கிய ரூ.2,00,000/–ஐ 6 சதவிகித வட்டியுடன் 3 மாதம் கழித்து மாதத்திற்கு ரூ. 9500/– வீதம் இந்த குழுவின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் .
- மாதாந்திர கூட்டம் நடைபெறும் தினத்திற்கு முன்பாக தவணைத்தொகையினை தொகுப்பு வங்கிக்கணக்கில் செலுத்த வேண்டும்.
- கரும்பு நாற்று உற்பத்தியாளர் குழுவின் ஊக்குநர் பிரதிநிதிகள் (செயலாளர், பொருளாளர்) இந்த கடன் தவணையை குழுவின் வங்கிக் கணக்கில் முறையாக செலுத்தி கடன் வசூல் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

## பாராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள்

1. தீர்மானப் பதிவேடு
2. வங்கி Passbook
3. கடன் வசூல் பதிவேடு

TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,
(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)
Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

4. கொள்முதல் பதிவேடு

**கண்காணிப்பு**

- சமுதாய வள பயிற்றுனர் கடன் தவணைகளை முறையாக (பண்ணை) கரும்பு உற்பத்தியாளர் குழுவின் வங்கிக் கணக்கில் செலுத்துவதை உறுதி .செய்ய வேண்டும்
- மாவட்ட வள பயிற்றுனர் (பண்ணை)கரும்பு நாற்று உற்பத்தி செய்யப்படும் இடத்தை மாதம் ஒரு முறை நேரில் சென்று பார்வையிட்டு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை சர்க்கரை ஆலை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் வழங்க வேண்டும் .
- உதவி திட்ட அலுவலர் (வாழ்வாதாரம்), மாவட்ட வள பயிற்றுநர் (பண்ணை) வட்டார மேலாளர் கரும்பு நாற்று உற்பத்தியாளர் குழுவின் மாதந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு தொகுப்பினை ஆய்வு செய்ய வேண்டும் .
- திட்ட இயக்குனர்மாதங்களுக்கு ஒரு முறை கரும்பு 3 மகளிர் திட்டம் , நாற்று உற்பத்தியாளர் குழுவின் செயல்பாடுகளை நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும் .

**இலக்கு**

நடப்பு 2024–25 ஆம் ஆண்டில், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மாவட்ட வாரியான இலக்கு பின்வருமாறு

| வ.எண் | மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கடலூர் | 10 |
| 2 | விழுப்புரம் | 10 |
| 3 | திருவண்ணாமலை | 10 |
| 4 | கள்ளக்குறிச்சி | 10 |
| 5 | வேலூர் | 10 |
| | **மொத்தம்** | **50** |

**ஒம்......**
**மேலாண்மை இயக்குனர்**

**//உண்மை நகல்//**

**கூடுதல்இயக்குநர் (வா)/ (பொ)**

11/7/24

Phone : 91-44-2817 3412 / 13 / 14 Fax : 91-44-2817 3409
E-mail : tncdwho@yahoo.co.in Web : http://www.tamilnaduwomen.org